


அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969

செவ்வாய், செப்டம்பர் 28.2021

மலர்:09 இதழ்:11

# விவசாயிகளுக்கான 1 லட்சம் புதிய மின் இணைப்பு

## ஊரக உள்ளாட்சித் தேர்தல்:சுவர் விளம்பரம் செய்யத் தடை-மாநில தேர்தல் ஆணையம்

## போலீசாரின் அதிரடி வேட்டை! 560 ரவுடிகள் நள்ளிரவில் கைது.!-டி.ஜி.பி சைலேந்திரபாபு



தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை நடத்த கூடுதல் கால அவகாசம் கோரி மாநில தேர்தல் ஆணையம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தலைமை நீதிபதி என்.வி. ரமணா அமர்வு முன்பு விசாரணை வந்தது. அப்போது தமிழ்நாட்டில் இன்னும் கொரோனா பாதிப்பு குறையாமலும் அதிகமாக பாதிப்பு பதிவாகும் மாநிலங்களில் மூன்றாவது இடத்திலும் இருப்பதால் தேர்தலை நடத்துவது சற்று சிரமமானது என்றும் தேர்தல் ஆணையம் கூறியது. அத்துடன் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கான பணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவடைந்து விடும் என்றும், தேர்தலை நடத்துவதற்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பெறுவதற்கு இரண்டரை மாதம் தேவைப்படும் எனவும் தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மாநில தேர்தல் ஆணையத்தின் கோரிக்கையை ஏற்ற உச்சநீதிமன்றம், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை நடத்த 4 மாத காலம் அவகாசம் வழங்கி உத்தரவிட்டது.




தமிழ்நாட்டில் கடந்த செப்டம்பர் 13 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத்தொடர் நிறைவடைந்த நிலையில், தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டிவருகிறார். இந்நிலையில், விவசாயிகளுக்கு ஒரு லட்சம் புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை 23.09.2021 தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார். சென்னை அண்ணா நூலகத்தில் விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புக்கான ஆணைகளை முதல்வர் வழங்கும் நிகழ்ச்சி தற்போது நடைபெற்றுவருகிறது. இந்நிகழ்வில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் போட்டி போட்டுக்கொண்டு தங்களது துறைகளில் பணிகளை செய்துவருகின்றனர். விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் மிகவும் மகத்தானது. கடந்த மே 7 ஆம் தேதி நான் பதவியேற்கவில்லை, பொறுப்பேற்றேன் என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த 7 ஆண்டுகளில் அதிமுக சுமார் இரண்டு லட்சம் மின் இணைப்புகளைத்தான் கொடுத்திருந்தது. ஆனால் திமுக பொறுப்பேற்ற நான்கு மாதத்தில் ஒரு லட்சம் மின் இணைப்புகள் வழங்க உள்ளது. இதைவிட பெருமையாக சொல்ல வேண்டும் என்றால், இதைவிட வேகமான ஆட்சி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. நான் பிறந்தபோதுதான் காவிரி ஒப்பந்தமும் உருவானது என கலைஞர் அடிக்கடி சொல்வார். அந்தக் காவிரி பிரச்சனைக்காக முழுமுயற்சி எடுத்தவர்தான் கலைஞர். காவிரி நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றினார்கள். உச்ச நீதிமன்றத்தில் காவிரி தொடர்பாக வழக்கையும் போட்டார்கள். இப்படி பல்வேறு முயற்சிகளை எடுத்தவர் கலைஞர். நிலமற்ற விவசயிகளுக்கு நிலம் வழங்குவேன் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் நிலமும் வழங்கப்பட்டது. 1,89,719 ஏக்கர் நிலத்தை 1,50,159 பேருக்கு வழங்கிய ஆட்சிதான் கலைஞரின் ஆட்சி இதற்கும் மேலாக உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அறிவித்ததும் கலைஞர் ஆட்சிதான், என்றார்.

## ஆபரேஷன் டிஸ்ஆர்ம் 2,512 ரவுடிகள் கைது.! 8 துப்பாக்கி பறிமுதல்

### டிஜிபி சைலேந்திரபாபு தகவல்



தமிழகம் முழுவதும் நடைபெற்ற 36 மணிநேர ஆபரேஷன் டிஸ்ஆர் என்ற பெயரிலான சோதனைநடவடிக்கையில் 2,512 ரவுடிகள் கைது செய்யப்பட்டு, கத்தி, அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்கள், 8 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, என்று டிஜிபி சைலேந்திரபாபு தெரிவித்தார்.திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் டிஜிபி சைலேந்திரபாபு தலைமையில் தென் மாவட்ட காவல்துறை அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முன்னதாக, செய்தியாளர்களிடம் டிஜிபி கூறியதாவது. தென்மாவட்டங்களில் சாதிய படுகொலைகள், முன்விரோத கொலைகளைத் தடுக்கும் வகையில் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது. 2012/2013 ம் ஆண்டுகளில் நடைபெற்ற கொலை சம்பவங்களின் தொடர்ச்சியாக, திருநெல்வேலியிலும், திண்டுக்கல்லிலும் நடைபெற்ற பழிதீர்க்கும் கொலை சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் நீதிமன்றங்களில் சரணடைந்துள்ளனர்.தமிழகம் முழுவதும் 36 மணிநேர 'ஆபரேஷன் டிஸ்ஆர்ம்' என்றபெயரில் நடந்த சோதனையின்போது 16,370 பேரை பிடித்து விசாரித்து, 2,512 ரவுடிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.733 பேர் சிறையில்அடைக்கப்பட்டுள்ளனர். 934 கத்திகள், அரிவாள்கள் மற்றும் 8 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1,927 ரவுடிகளிடம் இருந்து நன்னடத்தை பத்திரம் பெறப்பட்டுள்ளது. கொலைக் குற்றவாளிகள் மற்றும் ரவுடிகளைக் கைது செய்யதனி போலீஸ் படை அமைக்கப்பட்டுள்ளது.முன்விரோத கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கொலை வழக்குகள் மீது நீதிமன்ற விசாரணை துரிதப்படுத்தப்பட்டு தண்டனையை உறுதி செய்யவும் தனிப்படை அமைக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். கூலிப்படைகள் ஒடுக்கப்படும் என்றார். ஆலோசனைக் கூட்டத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வே.விஷ்ணு, தென்மண்டல ஐஜிஅன்பு, திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் செந்தாமரை கண்ணன், திருநெல்வேலி சரகடிஐஜி பிரவீன்குமார் அபினபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மணிவண்ணன் திருநெல்வேலி, ஜெயக்குமார், தூத்துக்குடி கிருஷ்ணராஜ், தென்காசி பத்ரி நாராயணன், கன்னியாகுமரி திருநெல்வேலி மாநகர சட்டம் ஒழுங்கு காவல் துணை ஆணையர் டி.பி.சுரேஷ்குமார், மாநகர குற்றப்பிரிவு காவல் துணை ஆணையர் கே. சுரேஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உள்ளாட்சித் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவது அவசியம்-சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தல்



உள்ளாட்சித் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவது அவசியம் என சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தலை 2 கட்டமாக நடத்த எதிர்ப்பு தெரிவித்து அதிமுக சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தேர்தலில் பணப் பட்டுவாடாவை தடுப்பது, வெளிமாநில தேர்தல் பார்வையாளர்களை நியமிப்பது, மத்திய காவல் படையை பணியமர்த்துவது, தேர்தலை முழுமையாக வீடியோ பதிவு செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தேர்தல் ஆணையத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மனு கொடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்த போது, மாநிலத்தில் பிரதான கட்சி என்ற முறையில் அதிமுக அளித்த கோரிக்கை மனுவை பரிசீலித்து, எடுக்கப்பட்ட நடவடிக்கையை, மனுதாரருக்கு செப்டம்பர் 29 க்குள் தெரிவிக்கும்படி மாநில தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டனர்.

## அரசு ஏ.சி.பஸ்கள்

### அக்.1 முதல் மீண்டும் இயக்கப்படும் என அறிவிப்பு!



அரசுப் போக்குவரத்துக் கழகத்தை சேர்ந்த ஏசி பஸ்கள் வரும் 1 ஆம் தேதி முதல் மீண்டும் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கை வெளியிட்ட போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், நோய்த் தடுப்பு நடவடிக்கையை பின்பற்றி 702 ஏசி பஸ்கள் இயக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். கொரோனாவால் கடந்த மே மாதம் முதல் மாவட்டங்கள், மாநிலங்களுக்கு இடையே இயக்கப்படாமல் இருந்த ஏசி பேருந்துகள், மீண்டும் இயக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில், 60 நகர பேருந்துகள், 642 புறநகர் ஏசி பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. பயணிகள் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்றும், சானிடைசர் மூலம் கைகளை சுத்தப்படுத்திய பிறகுதான் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.






அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், செப்டம்பர் 28.2021 | கடலூர் | மலர்:09 இதழ்:11

# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூர் ஆணவக்கொலை: ஒருவருக்கு தூக்கு, 12 பேருக்கு ஆயுள் தண்டனை

## தமிழ்நாட்டில் அதிகளவாக கடலூர் மாவட்டத்தில் 166 ஊராட்சிகளில் 100% தடுப்பூசி-அமைச்சர் மா.சுப்பிரமணியன்



தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க தமிழகம் முழுவதும் 3து மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் வடலூர் பேரூராட்சி பேருந்து நிலைய வளாகம் மற்றும் நெய்வேலி ஆர்ச்கேட் இந்திரா நகர் பகுதிகளில் நடைபெற்றுவரும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சித்தலைவர் கி. பாலசுப்ரமணியம் தலைமையில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில் கொரோனா தடுப்பூசி முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். கடலூர் மாவட்டத்தில் 100% கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட கீழ்கண்ட ஊராட்சி ஒன்றியங்களான அண்ணாகிராமம், புவனகிரி, காட்டுமன்னார்கோயில், பரங்கிப்பேட்டை, கீரப்பாளையம், குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், குமராட்சி, மங்களூர், நல்லூர் ஆகிய ஊராட்சிகளில் 100% பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் வட்டார மருத்துவ அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனைவருக்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாராட்டி கேடயத்தினை வழங்கினார். மேலும், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட ஊராட்சிகளின் கீழ்கண்ட ஊராட்சி தலைவர்களுக்கு குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்திராநகர், திருச்சோபுரம்,அம்பவவாணன் பேட்டை,கிருஷ்ணன்குப்பம், டிபாளையம், வழுதலாம்பட்டு, சமுட்டிக்குப்பம், காயல்பட்டு, பெத்தனாங்குப்பம், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அருண்மொழிதேவன், மேலக்கடம்பூர், பூவிழந்தநல்லூர், சிறுகாட்டூர், கீரப்பாளையம் ஊராட்சிஒன்றியத்திற்குட்பட்ட வடஹரிராஜபுரம், தென்ஹரிராஜபுரம், கந்தகுமரன், ஓடாக்கநல்லூர், பூந்தோட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரியகுமட்டி, மேலதிருக்கழிபாலை, பூவாலை, தச்சக்காடு, ஆயிபுரம், கம்மபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேப்பளாநத்தம், சாத்தப்பாடி, போன்ற ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் பாராட்டி கேடயத்தினைவழங்கினார்.

## கடலூர் ஆணவக்கொலை வழக்கில் 17 ஆண்டுகள் கழித்து தீர்ப்பு.!



கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் காதல் திருமணம் செய்த கண்ணகி முருகேசன் தம்பதிகள் ஆணவக் கொலை வழக்கில் ஒருவருக்கு தூக்கு தண்டனையும், 12 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி கடலூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. முன்னதாக, கண்ணகி, முருகேசன் தம்பதிகள் ஆணவக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 13 பேர் குற்றவாளிகள். அதன்படி, குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் 13 பேரில் மருதுபாண்டி என்பவருக்கு தூக்குத் தண்டனையும், மற்ற 12 பேருக்கும் ஆயுள் தண்டனையும் விதித்து கடலூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மருதுபாண்டி கண்ணகியின் சகோதரர் ஆவார். இந்த வழக்கில் பெண்ணின் உறவினர் து.மருதுபாண்டியனுக்கு சாகும் வரை தூக்கு தண்டனை விதித்து கடலூர் எஸ்.சி., எஸ்டி சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.உத்தமராசா உத்தரவு பிறப்பித்துள்ளார். கண்ணகியின் தந்தைக்கு துரைசாமிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கில் சம்பந்தப்பட்ட 15 பேரில் கொல்லப்பட்ட முருகேசன் உறவினர்கள் செ.அய்யாசாமி, பா.குணசேகரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். மீதமுள்ள 12 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார். விருத்தாசலத்தில் குப்பநத்தம் புதுக்காலனியைச் சேர்ந்த முருகேசன், கண்ணகி இருவரும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் காதல் திருமணம் செய்த நிலையில், கொலை செய்யப்பட்டனர். இது குறித்து விசாரணை நடத்தி வந்த சிபிஐ, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்த சிலையில், அனைத்து சாட்சியங்களிடமும் விசாரணை முடிவடைந்து கடலூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மூக்கு, காது வழியாக விஷத்தை ஊற்றி 2 பேரையும் கொன்று, உடலை எரித்ததாக தொடரப்பட்ட ஆணவக் கொலை வழக்கில், காவல் ஆய்வாளர் செல்லமுத்து, துணை ஆய்வாளர் தமிழ்மாறன், கண்ணகியின் தந்தை துரைசாமி, அண்ணன் உள்பட 13 பேர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மேலும் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.விருத்தாசலம் அருகே உள்ள குப்பநத்தம் புதுக்காலனியைச் சேர்ந்த சாமிகண்ணு மகன் முருகேசன்( 25) தலித் சமுதாயத்தைச்சேர்ந்த இவர், பி.இ. கெமிக்கல் பட்டதாரியாவார். இவர் அதேப் பகுதியில் வசித்த மற்றொரு சமுதாயத்தைச் சேர்ந்த துரைசாமி மகள் கண்ணகி(22) என்பவரை காதலித்து வந்தார். இதனையடுத்து இருவரும் கடந்த 5.5.2003 அன்று கடலூர் சார்—பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் செய்துகொண்டனர். எனினும் அவரவர் வீட்டில் தனித் தனியாக வசித்து வந்தனர். இந்த நிலையில், முருகேசன், கண்ணகியை விழுப்புரம் மாவட்டம் மூங்கில்துறைப்பட்டிலுள்ள உறவினர் வீட்டில் விட்டுவிட்டு அவர், ஸ்ரீமுஷ்ணம் அருகே வண்ணாங்குடிகாட்டிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். கண்ணகியை காணாமல் தேடிய அவரது உறவினர்களுக்கு, காதல் விவரம் தெரியவந்தது. எனவே, முருகேசனின் சித்தப்பா அய்யாசாமி மூலமாக ஜூலை 8 ஆம் தேதி முருகேசனையும், மூங்கில்துறைப்பட்டிலிருந்து கண்ணகியையும் அழைத்து வந்தனர். பின்னர் முருகேசன், கண்ணகி ஆகியோரை அருகிலுள்ள மயானத்துக்கு அழைத்துச் சென்று இருவருக்கும் மூக்கு, காது வழியாக விஷத்தை செலுத்தி அவர்களைக் கொலை செய்து, சடலங்களை தனித்தனியாக எரித்துள்ளனர்.சம்பவம் குறித்து முருகேசனின் உறவினர்கள் விருத்தாசலம் காவல் துறையினரிடம் தெரிவித்தபோது அவர்கள் நடவடிக்கை எடுக்காததோடு, சம்பவத்தை மூடிமறைக்கும் செயலில் ஈடுபட்டனராம். இதனையடுத்து சில நாள்களுக்குப் பின்னர் இந்தச் சம்பவம் ஊடகங்களில் வெளியானது. அதன்பின்னர் விருத்தாசலம் காவல் துறையினர் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்தனர். அதில் முருகேசன், கண்ணகி ஆகியோர் சாதி மாறி திருமணம் செய்ததால் அவரவர் தரப்பினர் தங்களது பிள்ளைகளை கொலை செய்ததாகக் கூறி இரு தரப்பிலிருந்தும் தலா 4 பேரை கைது செய்தனர்.ஆனால் இந்தக் கொலைகள் சாதி ஆணவத்தில் நடத்தப்பட்டது என்றும், எனவே, வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டுமென பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தின. இதனையடுத்து இந்த வழக்கு சிபிஐ விசாரணைக்கு 2004 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. அதே ஆண்டில் சிபிஐ குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. அதில், அப்போதைய விருத்தாசலம் காவல் நிலைய ஆய்வாளர் செல்லமுத்து, உதவி ஆய்வாளர் தமிழ்மாறன் உள்ளிட்ட 15 பேரை வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்த்தது. இந்த வழக்கு கடலூர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றவாளிகளில் ஒருவருக்கு தூக்கு தண்டனையும், மற்ற 12 பேருக்கும் ஆயுள் தண்டனையும் அளித்து கடலூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## விருத்தாசலத்தில் நிலத்திற்கு அடங்கல் சான்று பெற என்ஜினீயரிடம்

### லஞ்சம் வாங்கிய பதிவறை எழுத்தர் கைது.!



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அண்ணாநகர் காட்டுக்கூடலூர் சாலையை சேர்ந்தவர் பழனி. இவருடைய மகன் அருண் வயது(23). என்ஜினீயரான இவருக்கு குப்பநத்தம் கிராமத்தில் நிலம் உள்ளது. இந்த நிலத்துக்கு அடங்கல் சான்று கேட்டு விருத்தாசலம் தாலுகா அலுவலகத்தில் அருண் விண்ணப்பித்திருந்தார்.அப்போது ஆயிரத்து 500 லஞ்சம் தர அங்கிருந்த பதிவறை எழுத்தர் சிவக்குமார், அடங்கல் சான்று வேண்டும் என்றால் தனக்கு ரூ2 வேண்டும் என்று அருணிடம் தெரிவித்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத அருண், இதுபற்றி கடலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் புகார் செய்தார். இதையடுத்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கூறிய அறிவுரையின்படி, ரசாயன பொடி தடவிய 1,500 ரூபாயை எடுத்துக் கொண்டு அருண் விருத்தாசலம் தாலுகா அலுவலகத்திற்கு சென்றார். பின்னர் அங்கிருந்த பதிவறை எழுத்தர் சிவக்குமாரிடம், 1,500 ரூபாயை அருண் வழங்கினார்.அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை இன்ஸ்பெக்டர் சண்முகம் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் மாலா, திருவேங்கடம் மற்றும் போலீசார் லஞ்சம் வாங்கிய சிவக்குமாரை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்திய போலீசார், அவரை ஜீப்பில் ஏற்றி காட்டுக்கூடலூர் சாலையில் உள்ள அவரது வீட்டுக்கு அழைத்து சென்று சோதனையிட்டனர். இதில் முக்கிய ஆவணங்கள் ஏதும் கிடைக்கவில்லை. பின்னர் அங்கிருந்து கடலூர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். என்ஜினீயரிடம் ரூ1.500 லஞ்சம் வாங்கிய பதிவறை எழுத்தர் கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847

## திட்டகுடியில் 2 மணி நேரமாகியும் புறப்படாத அரசு பேருந்து

# நேரில் வந்த அமைச்சரின் அதிரடி ஆக்ஷன்



கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் அரசுப் போக்குவரத்து பணிமனை உள்ளது. இங்கிருந்து சென்னை, திருச்சி, கடலூர், விழுப்புரம் உட்பட பல்வேறு நகரங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் அரசு பஸ் சென்று வருகின்றன. இந்த நிலையில் தற்போது இப்பகுதியில் உள்ள கிராம விவசாய மானாவாரி நிலங்களில் தற்போது பருத்தி, மக்காச்சோளம், விதைத்து வளர்ந்து வருகின்றன. இந்தப் பயிர்களுக்குள் ஊடுருவி வளர்ந்துவரும் புல் செடிகளை களை எடுப்பதற்காக பல்வேறு கிராமப்புற ஊர்களில் இருந்து பெண்கள் திட்டக்குடி கடந்து 30 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் சென்று களை வெட்டி பிழைப்பு நடத்தி வருகிறார்கள். இவர்கள் தினசரி நீண்ட தூரம் சென்று களை எடுப்பதற்கு உதவியாக இருப்பது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தான். இந்த பேருந்துகளில் பெண்கள் செல்வதற்குத் தமிழக அரசு பெண்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதித்துள்ளது. இந்த சலுகை உழைக்கும் கிராமப்புற பெண்களுக்கு மிகவும் பேருதவியாக உள்ளது. அப்படி வேலைக்குச் சென்று விட்டு தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் செல்வதற்காகத் திட்டக்குடி பஸ் நிலையம் வந்து பஸ் ஏறி செல்கிறார்கள். இந்த நிலையில் திட்டக்குடியில் இருந்து செவ்வேரி கிராமத்திற்குத் தினசரி மதியம் 12 மணி அளவில் செல்ல வேண்டிய அந்த பஸ் நீண்ட நேரமாகியும் புறப்படவில்லை. 40 க்கும் மேற்பட்ட மகளிர் பொதுமக்கள் அந்த ஊர் வழியாக செல்வதற்கு பஸ்ஸில் ஏறி அமர்ந்து காத்திருந்தனர். இரண்டு மணி நேரம் கடந்தும் அந்த பேருந்து புறப்படவில்லை. இது குறித்து காரணம் கேட்டபோது அந்த பஸ்சை இயக்குவதற்கான கண்டக்டர் வரவில்லை அதனால் பஸ்புறப்படவில்லை என்று தகவல் கூறியுள்ளனர். இதனால் கோபம் அடைந்த பெண் பயணிகள் திட்டக்குடி பேருந்து நிலையம் முன்பு நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து திட்டக்குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்னக்கிளி, சப் இன்ஸ்பெக்டர் சந்துரு, மற்றும் திட்டகுடி டி.எஸ்.பி சிவன் மற்றும் போலீஸார் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தொகுதி எம்.எல்.ஏவுமான கணேசன் பொதுமக்கள் சாலை மறியல் செய்வதைக் கண்டு உடனே தனது காரை விட்டு இறங்கி பொதுமக்களிடம் சென்று குறைகளைகேட்டார். அப்போது பொதுமக்கள் கண்டக்டர் இல்லாததால் இரண்டு மணி நேரமாக பேருந்து செவ்வேரி கிராமத்திற்கு புறப்படவில்லை என்பதை தெரிவித்தனர். இதையடுத்து அமைச்சர் உடனடியாக திட்டக்குடி அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை மேலாளர் குமரகுருவை வரவழைத்துப் பேசி வேறு கண்டக்டரை நியமித்து பஸ்சை கிராமத்திற்கு அனுப்பி வைத்தார். மேலும் சம்பந்தப்பட்ட கண்டக்டர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். இதனால் அங்குச் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் தமிழக முதல்வர் ஸ்டாலின் நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என்று அறிவிக்கப்பட்டது முதல் பல்வேறு நகரப் பேருந்துகளில் பெண்கள் கூட்டமாக செல்வதை அதில் பணி செய்யும் கண்டக்டர்கள், ஓட்டுனர்கள் விரும்புவதில்லை. பஸ் நிலையத்தில் நிற்கும் நகர பேருந்துகளில் பெண்கள் ஏறும்போது இந்த பேருந்து இப்போது செல்லாது, அந்தப் பேருந்தில் ஏறுங்கள் என்று கூறுவது வழக்கமாக உள்ளது. அந்த பேருந்தில் ஏறினால் இந்த பேருந்து இப்போது செல்லாது என்று அந்த நடத்துநர் இறக்கி விடுவதும் இப்படி பெண்களை அலைக்கழிக்க விடுகிறார்கள். வேறு வழியின்றி செல்லும் பேருந்துகள் பஸ் நிறுத்தங்களில் பெண்கள் நின்று பஸ்சில் ஏறுவதற்கு கையை நீட்டினால் பேருந்துகளை அங்கு நிறுத்துவதில்லை, இப்படி பெண்களை பல விதங்களிலும் அவமானப்படுத்துவதும் அவர்களை உதாசீனப் படுத்துவதும் எனஅரசு பேருந்து ஓட்டுனர், நடத்துனர்கள் பெரும்பான்மையினர் செய்து வருகிறார்கள். அரசு பஸ்சில் பெண்களுக்கு இலவச பயணம் என்று அறிவித்தும் கூட அதன் மூலம் பெண்களுக்கு அது பயனில்லாமல் போகிறது. எனவே அரசு போக்குவரத்துக்கழக அதிகாரிகள் இதுபோன்ற பஸ்களை இயக்கும் ஓட்டுனர் நடத்துநர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். இதே நிலை தொடருமானால் பெண்கள் போராட்டத்தில் கூடும் நிலை ஏற்பட்டுள்ளது. தங்கள் வயிற்று பிழைப்புக்காக குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகக் கூலி வேலைக்குச் செல்வதற்காக, கடைகளுக்கும், தினசரி வேலைக்கு அன்றாடம் பஸ்ஸில் பயணம் செய்யும் பெண்கள்களின் நிலை தற்போது மிகவும் பரிதாபமாக உள்ளது என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

## பெண்ணாடம் அருகே பிளஸ் 1 மாணவி திடீர் சாவு

## போலீசுக்கு தெரியாமல் உடல் எரிப்புதாய், உறவினர்கள் மீது வழக்கு



கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அடுத்த வெண்கரும்பூர் கிராமத்தை சேர்ந்தவர் அறிவழகன். இவருடைய மனைவி ரஷிதா. இவர்களுடைய மகன் தர்மேஷ், மகள் பிரியதர்ஷினி(வயது 17) அறிவழகன் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். தர்மேஷ், திருச்சியில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வருகிறார். பிரியதர்ஷினி, அதே பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார். பள்ளிக்கூடம் திறந்தநாளில் இருந்து பிரியதர்ஷினி பள்ளிக்கு செல்லவில்லை. இதை ரஷிதா கண்டித்ததால் மனம் உடைந்த பிரியதர்ஷினி கடந்த 23 ந்தேதி வீட்டில் இருந்த விஷத்தை எடுத்து குடித்து விட்டார். மயங்கிய நிலையில் கிடந்த அவரை உறவினர்கள் மீட்டு பெண்ணாடத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு பிரியதர்ஷினி சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். இந்த நிலையில் அவருக்கு மீண்டும் உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் விருத்தாசலம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே பிரியதர்ஷினி பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். இதுபற்றி அவர்கள் போலீசாருக்கு தெரிவிக்காமல், மாணவியின் உடலை வீட்டிற்கு கொண்டு வந்து தகனம் செய்வதற்கு தகனம் செய்ய முடிவு செய்தனர். இதுபற்றி அறிந்த கிராம நிர்வாக அலுவலர் மாலா பெண்ணாடம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில் பெண்ணாடம் சப்—இன்ஸ்பெக்டர் கோபிநாத் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பிரியதர்ஷினியின் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்கு அனுப்புவதற்காக உறவினர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால் பேச்சுவார்த்தைக்கு உடன்படாத உறவினர்கள், திடீரென பிரியதர்ஷினியின் உடலை எடுத்து சென்று எரித்தனர். இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலர் மாலா கொடுத்த புகாரின் பேரில் ரஷிதா, தர்மேஷ் மற்றும் அவரது உறவினர்கள் மீது பெண்ணாடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கடலூரில் கூட்டமாக பயணம் செய்யும் மாணவர்கள்

## காற்றில் பறந்த கொரோனா கட்டுப்பாடுகள்.!



கொரோனா பரவல் குறைவு காரணமாக கடந்த செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் தமிழகம் முழுவதும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளிக்கூடங்கள் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. அந்த வகையில் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒன்றாம் தேதி முதல் 469 பள்ளிகள் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்த சூழ்நிலையில் பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு கொரோனா தொற்று ஏற்படதாபடி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது. இந்த நிலையில் கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 683 ஊராட்சிகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பபட்ட கிராமங்களில் இருந்து சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அரசு பேருந்து மூலம் பள்ளிக்கு சென்று வருகின்றனர். இந்த நிலையில் பெரும்பாலான மாணவ மாணவிகள் மாவட்ட தலைநகர் மற்றும் நகர பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். சுமார் 20 முதல் 50 கிலோமீட்டர் பேருந்தில் பயணம் மேற்கொண்டு பள்ளிக்கு வருகை தருகிறார்கள். இந்த நிலையில் கடலூரில் பள்ளி முடிந்த பிறக்கு கடலூர் மத்திய பேருந்து நிலையத்தில் வீட்டிற்கு செல்ல ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் அரசு பேருந்துக்காக நீண்ட நேரம் காத்திருக்கின்றனர். மேலும் சில நேரங்களில் ஒரு சில ஊர்களுக்கு மிக குறைவான பேருந்து மட்டுமே இயக்கபடுவதால் ஒரே பேருந்துகளில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் முந்தி அடித்து கொண்டு பேருந்தில் ஏறி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பள்ளி மாணவ மாணவிகள் அரசு பேருந்தில் இலவசம் என்பதால் பெரும்பாலன மாணவ மாணவிகள் அரசு பேருந்தை மட்டுமே நம்பி வருகின்றனர். இந்த நிலையில் மகளிர்களுக்கும் நகர பேருந்துகளில் இலவசம் என்பதால் தற்போது பேருந்துகளில் அதிகளவு மக்கள் கூட்டம் கூடுகிறது. இதே போல் விருத்தாசலம் மற்றும் திட்டக்குடி பேருந்து நிலையத்தில் மாணவ மாணவிகள் காலை மாலை என இரு நேரங்களில் பேருந்துக்காக காத்திருகின்றர். மேலும் படியில் தொங்கியபடி பல மாணவர்கள் பணயம் செல்வது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையாகவும் உள்ளது. இதில் மேலும் இனி அடுத்து 6 முதல் 8 வரை பள்ளிகள் திறக்கபடவுள்ளதால் கடலூர் மாவட்டத்தில் கூட்ட நெரிசலை குறைக்க பள்ளி மாணவ மாணவிகளுக்கு என கூடுதலாக பேருந்துகளை இயக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து நிர்வாகிகளிடம் தகவல் தெரிவித்த பொழுது அவர்கள் கடலூர் மாவட்டத்தில் மேலும் கூடுதலாக பேருந்துகள் இயக்கப்பட உள்ளது மேலும் கடலூரில் இருந்து சிதம்பரம், நெய்வேலி போன்ற ஊர்களுக்கு செல்லும் விரைவு பேருந்துகளிலும் மாணவர்களை ஏற்றிசெல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தனர். ஏற்கனவே கடலூர் மாவட்டத்தில் ஐந்து ஆசிரியைகள் மற்றும் ஒரு மாணவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விருத்தாசலம் அருகே குடிநீர் குழாய் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தி பொதுமக்கள் போராட்டம்



விருத்தாசலம் அடுத்த கருவேப்பிலங்குறிச்சி அருகே உள்ள குறுக்கத்தஞ்சேரி கிராமத்தில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்காக குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே குழாய் அமைத்த இடத்தில் இருந்த குழாய்களை அகற்றாமல், அப்பகுதியில் உள்ள வீடுகள், கொட்டகைகளை, சிமெண்டு சாலைகளை சேதப்படுத்தி குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிகிறது. இதை கண்டித்தும், ஏற்கனவே இருக்கும் இடத்திலேயே புதிய குழாய் அமைக்க வலியுறுத்தியும் ஊராட்சி மன்ற உறுப்பினர் இளையராஜா தலைமையில் குழாய் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுபற்றி தகவல் அறிந்த கருவேப்பிலங்குறிச்சி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி இதுகுறித்து அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். இதையேற்ற பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## குமராட்சி: கொரானா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களுக்கு வங்கியின் மூலம் ஆயுள் காப்பீடு!



குமராட்சி ஊராட்சியில் மெகா கொரானா தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களுக்கு ஊராட்சி சார்பில் வங்கியின் மூலம் ஆயுள் காப்பீடு செலுத்தினர் கடலூர் மாவட்டம் குமராட்சி ஊராட்சியில் முந்தினம் குமராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மூன்றாவது கட்டமாக மெகா கொரானா தடுப்பூசி முகாம் ஊராட்சி மன்ற தலைவர் கேஆர்ஜி தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்றது இதில் மக்களின் விழிப்புணர்விதமாக தடுப்பூசி போட்டுக் கொள்ளும் நபர்களின் பெயர்களைப் பதிந்து குலுக்கல் முறையில் பத்து நபர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு இந்தியன் வங்கியின் மூலம் ஆயுள் காப்பீடு செய்யப்படும் என ஊராட்சி தலைவர் அறிவித்திருந்தார் அதன்படி இன்று குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து நபர்களுக்கு வெண்ணையூர் இந்தியன் வங்கி வணிக தொடர்பாளர் தீபிகா பகுதி மேலாளர் பாலாஜி அவர்களின் மூலம் மேற்படி பத்து நபருக்களுக்கும் ஆயுள் காப்பீடு இன்சூரன்ஸ் செலுத்தப்பட்டது இதையடுத்து இன்சூரன்ஸ் செலித்தியதற்கான ஆவண படிவத்தை சிறப்பு அழைப்பாளராக காட்டுமன்னார்கோயில் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் தமிழ்ச்செல்வன் அவர்களும் குமராட்சி ஊராட்சி மன்ற தலைவர் கேஆர்ஜி. தமிழ்வாணன் அவர்களும் ஆயுள் காப்பீடு படிவத்தை வழங்கினார்கள் உடன் ஊராட்சி செயலர் சிலம்பரசன் துணைத் தலைவர் உமா மகேஸ்வரி விஜயகுமார் மற்றும் வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை மாவட்டத்தில் 3-வது மாபெரும் தடுப்பூசி முகாம்

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு










மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் மயிலாடுதுறை ஒன்றியத்திற்குட்பட்ட உளுத்துக்குப்பை ஊராட்சி மயிலாடுதுறை நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சீர்காழி நகராட்சி பகுதியில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார்.இவ்வாய்வின்போது பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம், மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் உடனிருந்தனர். பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது. தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கி மூன்றாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மிகசிறப்பாக நடைபெற்று வருகிறது. இம்முகாம்களின் மூலம் 20 ஆயிரம் மையங்கள், 15 லட்சம் இலக்கு என்கின்ற வகையில் இம்முகாம்கள் தொடங்கப்பட்டது.

அனைத்து முகாம்களிலும் மக்கள் ஆர்வத்துடன் வந்து தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர், அந்தவகையில் இதுவரை 18 லட்சம் இலக்கு என்பதை கடந்து 76 லட்சத்து 76 ஆயிரம் நபர்கள் கொரோனா தடுப்பூசி போட்டு சென்றுள்ளனர். தமிழகத்தில் நடைபெற்ற முதல் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 40 ஆயிரம் கொரோனா தடுப்பூசி மையங்கள்20 லட்சம் நபர்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 28 லட்சத்து 31 ஆயிரம். அதேபோல் கடந்த 19 ஆம் தேதி நடைபெற்ற இரண்டாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் ஆயிரம் மையங்கள், 15 லட்சம் இலக்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அந்த இலக்கை கடந்து 16 லட்சத்து 43 ஆயிரம் நபர்கள் கொரோனா தடுப்பூசி போட்டு சென்றுள்ளனர். இந்தவாரம் தமிழக முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் 20 ஆயிரம் கொரோனா தடுப்பூசி மையங்கள், 15 லட்சம் இலக்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 18 லட்சத்து 76 ஆயிரம் நபர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி சென்றுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி வரை கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றது. நிச்சயம் லட்சத்தை கடந்து 20 கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்து மகத்தான சாதனை படைக்கும்.ஏற்கனவே

தமிகழத்தில் 56 சதவீதம் நபர்கள் கொரோனா தடுப்பூசி முதல் தவணை போட்டுக்கொண்டுள்ளனர். நிச்சயம் ஞாயிற்றுக்கிழமை தடுப்பூசி முகாம்களுக்கு பிறகு முதல் தவணை தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 60 சதவீதத்தை நெருங்கும்.மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரை 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 7 லட்சத்து 61 ஆயிரத்து 320. இதில் சனிக்கிழமை வரை 3 லட்சத்து 53 ஆயிரத்து 432 நபர்கள் முதல் தவணை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். இரண்டாம் தவணை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் 1 லட்சத்து 18 ஆயிரத்து 712 நபர்கள். கடந்த 12 ஆம் தேதி நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 42 ஆயிரத்து 473 நபர்களும், கடந்த 19 ஆம் தேதி நடைபெற்ற 2—வது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 27 ஆயிரத்து 305 நபர்களும் கொரோனா தடுப்பூசி போட்டுச் கொண்டுள்ளனர். இதில் 4729 கர்ப்பணி தாய்மார்கள், 2890 பாலூட்டும் தாய்மார்கள், 2411 மாற்றுத்திறனாளிகள், 47 திருநங்கைகள் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் 504 முகாம்கள் மூலம் 53 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மிகச்சிறப்பாக நடைபெறும் இம்முகாமில் இலக்கையும் கடந்து கொரோனா தடுப்பூசி போடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசால் கொரோனா தடுப்பூசியின் அவசியம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மக்களும் தடுப்பூசி முகாம்கள் மூலம் ஆர்வமுடன் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து 100 சதவீதம் தடுப்பூசி இலக்கை பூர்த்தி செய்த மாவட்டத்தின் 3 வட்டாரங்களை சேர்ந்த கிராமங்களில், சிறப்பாக பணியாற்றியமைக்காக 13 ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை அமைச்சர் வழங்கினார். தொடர்ந்து சீர்காழி அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் மையத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி மங்கை சங்கர், இணை இயக்குநர். சுகாதாரத்துறை விஜயலெட்சுமி, துணை இயக்குநர் சுகாதாரத்துறை, மருத்துவர் பிரதாப், நாகை—மயிலாடுதுறை ஒருங்கிணைந்த மாவட்ட தலைமை மருத்துவர் மகேந்திரன் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளும், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## மயிலாடுதுறை பனை விதை நடும் பணியை

# மாவட்ட காவல் கண்காணிப்பாளர் துவக்கி வைத்தார்



மயிலாடுதுறை மாவட்டத்தில் காவல்துறையும் பெரம்பூரை சேர்ந்த சமூக சேவகர் பாரதிமோகன் அறக்கட்டளையும் சேர்ந்து தமிழகத்தின் பெருமையாக திகழக்கூடிய பனை மரங்கள் நடும் விழாவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங், மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜன், அறக்கட்டளையின் நிறுவன தலைவர் எஸ். பாரதி மோகன் ஆகியோர் சனிக்கிழமை பனை விதைகள் நட்டு துவக்கி வைத்தனர். ஒரு லட்சம் மரக்கன்றுகள் என்ற இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவை சனிக்கிழமை முதல் கட்டமாக மங்கைநல்லூர் முதல் பொறையார் வரை சுமார் 25 கிலோமீட்டர் தொலைவிற்கு வீரசோழன் ஆறு ஓரமாக 20000 பனை விதைகள் 500 மரக்கன்றுகளை காவல்துறையினர், சமூக ஆர்வலர்கள், பள்ளி மாணவ மாணவிகள், கல்லூரி மாணவர்கள் மூலமாகவும் நடப்பட்டது. பனை விதை மற்றும் மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் பெரம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் சிவதாஸ், பாரதிமோகன் அறக்கட்டளை நிர்வாகிகள் தனுஷ்கோடி ஸ்டாலின் செல்லம்மாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் முதலமைச்சர் நிவாரண நிதியின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி

# மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா வழங்கினார்




மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழக முதலமைச்சர் நிவாரண நிதியின் கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக ஒற்றை பெற்றோரை இழந்த 17 குழந்தைகளுக்கு தலா ரூ3 இலட்சம் வீதம் ரூ.51 லட்சத்திற்கான காசோலைகளைமாவட்ட ஆட்சியர் இரா.லலிதா வழங்கினார்.மேலும், இம்மாவட்டத்தில் இதுவரையில் கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக பெற்றோர் இருவரையும் /ஒற்றை பெற்றோரை இழந்த 84 குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிவாரண நிதி பெற்று வழங்குவதற்கான கருத்துரு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் இதுவரை ஒற்றை பெற்றோர்/பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி பெற்று வழங்கப்பட்டுள்ளது.ஆட்சித்தலைவர் இரா.லலிதா தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் என்.சிவக்குமார் மற்றும் என் மாவட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

## மயிலாடுதுறையில் 31 சவரன் நகையை தவற விட்ட பெண்மணி

# காவல்துறையிடம் கொடுத்த பேக்கரி ஊழியர்கள்




மயிலாடுதுறையில் ஒருமணி நேரத்தில் காணாமல் போன நகைகளை மீட்ட உரியவரிடம் ஒப்படைத்த காவலர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டு தெரிவித்தார்.மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா ஆயப்பாடி மெயின்ரோட்டை சேர்ந்தவர் அப்துல் குத்தூஸ் என்பவரின் மனைவி மெகராஜ்கனி (46) இவர் இவரது மகள் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டு கணவருடன் சொந்த ஊரான நீடூருக்கு திரும்பியுள்ளார். மகளை பார்ப்பதற்காகவும், அவரிடம் பவுன் நகைகளை கொடுப்பதற்காகவும் ஆயப்பாடியில் இருந்து மயிலாடுதுறைக்கு மெகராஜ்கனி பஸ்ஸில் வந்துள்ளார். மயிலாடுதுறை பஸ் நிலையம் வந்திறங்கிய மெகராஜ்கனி கச்சேரி சாலையில் உள்ள பிரபல பேக்கரி கடை ஒன்றில் இனிப்புகள் வாங்கியுள்ளார். பின்னர் மெகராஜ்கனி ஆட்டோவில் நீடூருக்கு சென்றுள்ளார். அங்கு சென்றவுடன் நகைகள் வைத்திருந்த பை காணாமல் போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே மயிலாடுதுறை காவல் நிலையத்தில் மெகராஜ்கனி புகார் அளித்தார். புகாரின் பேரில் மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் செல்வம் தலைமையிலான காவல்துறையினர் ஆட்டோ டிரைவர் மற்றும் பேக்கரி கடை ஊழியர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். ஆனாலும் காணாமல் போன நகைகளை கண்டுபிடிக்க முடியாமல் காவல் துறையினர் திணறினர். இதனை அடுத்து மயிலாடுதுறை நகரில் அமைக்கப்பட்டுள்ள 81 சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களில் சில முக்கிய கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் பேக்கரி கடையில் மெகராஜ்கனி நகையை வைத்துவிட்டு வெளியே வந்தது தெரியவந்தது. இதனை அடுத்து காவல் ஆய்வாளர் செல்வம் மற்றும் காவல்துறையினர் பேக்கரி கடையில் மீண்டும் விசாரணை மேற்கொண்டனர். அப்போது பேக்கரி கடையில் இருந்த ஊழியர்கள் மெகராஜ்கனி விட்டுச்சென்ற நகையை காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர். மேலும் அந்த பையில் என்ன இருந்தது என்பது தங்களுக்குத் தெரியாது என்றும் நகை பேக்கரி கடை ஊழியர்கள் காவல்துறையினரிடம் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் காணமால் போன நகைகளான 3 நெக்லஸ்கள், 3 ஜோடி வளையல்கள் உட்பட 31 பவுன் நகைகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணாசிங் மெகராஜ்கனியிடம் ஒப்படைத்தார். மேலும் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களை சிறப்பாக ஆய்வு செய்து, தவறவிட்டு சென்ற நகையை ஒரு மணிநேரத்தில் மீட்டு சிறப்பாக பணியாற்றியதற்காக தலைமை காவலர் செந்தில்குமார், காவலர் சுகுணா ஆகியோரை பாராட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணாசிங் சான்றிதழ் வழங்கினார். அப்போது மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தங்கவேலு, காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ், காவல் ஆய்வாளர் செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மயிலாடுதுறையில் சுகாதாரமற்ற உணவகத்திற்கு சீல் வைத்த அதிகாரிகள்





உணவு தயாரிக்கும் கூடம் சுகாதாரமற்ற முறையில் இருந்ததால் மயிலாடுதுறையில், ஓட்டலை பூட்டி அதிகாரிகள் சீல் வைத்தனர். மேலும் பழைய இறைச்சி மற்றும் காலாவதியாக உணவு பொருட்களை விற்பனை செய்த கடை, ஓட்டல் உரிமையாளர்களுக்கு ரூ.1 லட்சத்து 60 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மயிலாடுதுறை பகுதியில் கடைகள் மற்றும் ஓட்டல்களில் காலாவதியான உணவுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும், அசைவ ஓட்டல்களில் தரமற்ற கறிகள் பயன்படுத்தப்படுவதாகவும் புகார்கள் வந்தது. இதனையடுத்து மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் பாலு தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர் சீனிவாசன், நகர்நல அலுவலர் மலர்மன்னன் மற்றும் அதிகாரிகள் நேற்று மயிலாடுதுறை காமராஜர் பஸ் நிறுத்தம், ஸ்டேட் பேங்க் ரோடு, காந்திஜிரோடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள டீக்கடை, குளிர்பான கடைகள், அசைவ ஓட்டல்களில் திடீரென சோதனை நடத்தினர். இதில் அசைவ ஓட்டல்களில் பழைய கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி, மீன் போன்றவை குளிர்பதன பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதை தொடர்ந்து பழைய இறைச்சிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் காந்திஜி சாலையில் உள்ள ஒரு அசைவ ஓட்டலில் பழைய இறைச்சி மற்றும் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரிக்கும் கூடம் இருந்ததால் அந்த ஓட்டலை பூட்டி அதிகாரிகள் சீல் வைத்தனர். பழைய இறைச்சி மற்றும் காலாவதியான உணவு பொருட்கள் வைத்திருந்த கடை, ஓட்டல் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு ரூ.1 லட்சத்து 60 ஆயிரம் வசூலிக்கப்பட்டது. இதுகுறித்து நகராட்சி ஆணையர் பாலு கூறுகையில், கடைகளில் விற்பனை செய்யப்படும் அனைத்து உணவு பொருட்களுக்கும், உற்பத்தி தேதி மற்றும் காலாவதி தேதி குறிப்பிடப்பட்டு இருந்தால் மட்டுமே அதனை வாங்கி வியாபாரிகள் விற்பனை செய்ய வேண்டும். தேதி குறிப்பிடப்படாமல் உணவு பொருட்களை பாக்கெட்டுக்களில் போட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டால் அவற்றை பறிமுதல் செய்வதோடு அபராதம் விதிக்கப்படும். ஓட்டல்களில் உணவு தயாரிப்பு கூடங்களை சுகாதாரமான முறையில் வைத்துகொள்ள வேண்டும். அசைவ ஓட்டல்களில் தினந்தோறும் இறைச்சிகளை வாங்கி உணவு தயாரிக்க வேண்டும். கெட்டுப்போன இறைச்சிகள் விற்பனை செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## மயிலாடுதுறை நெடுஞ்சாலை துறை கோட்டம் புதிதாக அலுவலகம் திறப்பு



கடந்த ஆண்டு மயிலாடுதுறை மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. ஆனாலும், முக்கிய துறைகளின் தலைமையிடமாக நாகப்பட்டினம் விளங்கி வந்தது. இந்நிலையில் நாகப்பட்டினம் நெடுஞ்சாலைத்துறை கோட்டத்தை இரண்டாக பிரித்து மயிலாடுதுறை கோட்டம் உருவாக்கப்படும் என்று தமிழக அரசு சமீபத்தில் அறிவித்திருந்தது. அதன்படி, மயிலாடுதுறை கோட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு கோட்ட பொறியாளர் அலுவலகம் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைத்துறை திருச்சிராப்பள்ளி மண்டல கண்காணிப்பு பொறியாளர் ஆர்.கிருஷ்ணசாமி, நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி அலுவலகத்தை திறந்து வைத்தார். பின்னர், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் அலுவலக வளாகத்தில் திருச்சி மண்டல பொறியாளர் கிருஷ்ணசாமி, மயிலாடுதுறை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், ராஜ்குமார், பன்னீர்செல்வம் ஆகியோர் மக்களுக்கு பலன் தரும் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.நாகப்பட்டினம் கோட்ட பொறியாளர் கூடுதல் பொறுப்பாக மயிலாடுதுறை கோட்டத்தை கவனிப்பார் என்றும், அரசால் புதிதாக அலுவலர் விரைவில் நியமனம் செய்யப்படுவார் என்றும் திருச்சி மண்டல கண்காணிப்பு பொறியாளர கிருஷ்ணசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.நிகழ்ச்சியில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொருளாளர் ஜி.என்.ரவி. நகர செயலாளர் செல்வராஜ், மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் இளையபெருமாள், மயிலாடுதுறை மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் மயிலாடுதுறை கோட்ட நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை நகராட்சியில்

# மாபெரும் தூய்மைப்பணி முகாம்



மயிலாடுதுறையில் 10 நிமிடம் மழை பெய்தாலே கண்ணாரத்தெரு, கச்சேரி சாலை சந்திப்பு, காந்திஜிசாலை, முத்துவக்கீல் சாலை சந்திப்பு, பட்டமங்கலத்தெரு ஜெமினி கார்னர், மயிலாடுதுறை நகராட்சி அலுவலகம் எதிரில் என நகரில் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடைஞ்சலாக இருந்து வருகிறது. இதற்கு அடிப்படை காரணம் மயிலாடுதுறை நகராட்சி நிர்வாகம் சாலைமற்றும் வீதிகளின் ஓரத்தில் உள்ள மழைநீர் வடிகாலை சரியாக பராமரிக்காததுதான், குறிப்பாக மயிலாடுதுறை நகராட்சி அலுவலகம் முன் 5 நிமிடம் மழைகே மழைநீர் தேங்கி மக்கள் நடக்க முடியாத அளவிற்கு தண்ணீர் தேங்கிவிடும். அதேபோல கண்ணாரத் தெரு முக்கூட்டிலிருந்து கச்சேரிசாலைக்கு செல்லும் வழியிலும் மழைநீர் வடிகால் தூர்வாராததால் 5 நிமிட மழைக்கே மழைநீர் தேங்கி வாகனத்தில் மக்கள் செல்ல முடியாத நிலைக்கு ஆளாக்கி வருகிறது. நகராட்சி அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துக்கூறியும் அவர்கள் அதை காதில் வாங்கி கொள்வதேயில்லை, அதிகாரிகள்தான் மாறுகிறார்களே தவிர அலட்சியம் மாறவில்லை. இதைக் கேள்விப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் லலிதா மேற்கொண்ட நடவடிக்கையின்பேரில் நேற்று தூய்மைப்பணி முகாம் நடைபெற்றது.இதுகுறித்து கலெக்டர் லலிதா கூறுகையில், அனைத்து நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் மாபெரும் தூய்மை பணி முகாம் நடைபெறுகிறது. மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட கச்சேரி சாலையில் உள்ள கண்ணார தெருவில் சாலையோர வடிகால் வாய்க்கால் தூய்மை பணியாளர்கள் மூலம் தூர்வாரப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளின் மூலம் குடியிருப்பு பகுதிகளில் மழை காலங்களில் மழைநீர் சூழாமலும்,மழைநீர் தேங்கி நிற்காத வகையில் முழுமையாக தூர்வாரிட அனைத்து நடவடிக்கையும் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

## மயிலாடுதுறையில் கல்லூரி மாணவிகள்

# 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



மயிலாடுதுறையில் உள்ள ஒரு அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புதன்கிழமை வெளியூரில் இருந்து வந்த மாணவிகள் 5 பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து அவர்களை பரிசோதனை செய்ததில் அவர்கள் அனைவருக்கும் கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து அந்த வகுப்பு மாணவிகள், ஆசிரியர்கள் என 500 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. 2 ஆயிரத்து 500 மாணவிகள் படித்து வரும் கல்லூரி என்பதால் உடனடியாக கல்லூரி நிர்வாகமும், சுகாதாரத்துறையும் கலந்து ஆலோசனை நடத்தியது. இதனைத்தொடர்ந்து முன் எச்சரிக்கை நடவடிக்கையாக 5 நாட்கள் கல்லூரிக்கு விடுமுறை அளிப்பது என்றும், 4 நாட்களுக்கு பாடங்களை ஆன்லைன் வகுப்பு மூலம் பாடங்களை நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி வருகிற ஞாயிற்றுக்கிழமை வரை அந்த கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பரிசோதனை செய்யப்பட்ட 369 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவில் நேற்று தெரிய வந்தது. இதேபோல அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் ஆசிரியை ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. உடனடியாக அந்த ஆசிரியை பாடம் நடத்திய வகுப்புகளில் உள்ள மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வந்த பிறகே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வித்துறை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

வாடகைக்கு கடை தேவை: 8610255229